## தேசிய செய்திகள்

**நீர் மேலாண்மைக்காக நீர் பயன்பாட்டுத் திறன் பணியகம் மற்றும் இந்திய ப்ளம்பிங் சங்கம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- நீர் பயன்பாட்டுத் திறன் பணியகமானது (BWUE) இந்திய ப்ளம்பிங் அமைப்புடன்(IPA) **ஜூலை 07** அன்று, நீரின் மேலாண்மையை மேலும் வலுப்படுத்தலுக்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- **மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், சாம்பல் மற்றும் கருப்பு நீர் சிகிச்சை** , குறைந்த ஓட்டம் கொண்ட சாதனங்கள் மற்றும் சுகாதாரப் பொருட்கள், கட்டப்பட்ட சூழலின் நீர் தணிக்கை ஆகியவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்காக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு அமைச்சர் ராணுவப்பயிற்சியாளர்களுக்கான "ஒற்றைச் சாளர NCC-யின் ஒருங்கிணைந்த மென்பொருளை" அறிமுகப்படுத்தியுள்ளார்.**

- **டிஜிட்டல்மயமாக்கலை** ஊக்குவிப்பதற்காகவும், **டிஜிட்டல் இந்தியா திட்டம்** மூலம் அதன் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் மத்திய பாதுகாப்பு அமைச்சர் **ஸ்ரீ ராஜ்நாத் சிங்**, ஜூலை 07 அன்று **புது தில்லியில்** ராணுவப்பயிற்சியாளர்களுக்கான **"NCC-யின் ஒருங்கிணைந்த மென்பொருளை**" அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இந்த NCC ஒருங்கிணைந்த மென்பொருளானது **பாஸ்கராச்சார்யா இன்ஸ்டிடியூட் ஃபார் ஸ்பேஸ் அப்ளிகேஷன்ஸ் அண்ட் ஜியோ இன்ஃபர்மேடிக்ஸ் (BISAG)** நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நகர்ப்புற 20 (U20) மேயர் உச்சி மாநாடானது காந்திநகரில் தொடங்கப்பட்டுள்ளது.**

- நகர்ப்புற 20 (Urban 20) மேயர் உச்சி மாநாடானது **ஜூலை 7** அன்று, குஜராத் மாநில முதலமைச்சர் **ஸ்ரீ பூபேந்திரபாய் படேல்** மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான மாநில அமைச்சர் **ஸ்ரீ கவுசல் கிஷோர்** ஆகியோரால் அம்மாநில தலைநகரமான **காந்தி நகரில்** தொடங்கப்பட்டுள்ளது.
- நகரமயமாக்கல் மற்றும் காலநிலையின் வளர்ந்து வரும் எதிர்ப்பு சவால்களைச் சமாளிக்க மற்றும் **நிலையான - காலநிலை நகரங்களை** உருவாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடத்தப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

**பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தின் இரண்டாவது பெண் நீதிபதி என்ற அந்தஸ்தை நீதிபதி முசரத் ஹிலாலி பெற்றுள்ளார்.**

- **நீதிபதி முசரத் ஹிலாலி** ஜூலை 07 அன்று பதவிப் பிரமாணம் செய்து, பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் பெண் நீதிபதியாக பதவியேற்றதால், அந்நாட்டின் **உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக பதவியேற்ற இரண்டாவது பெண்** என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார்.
- பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றத்தில் **இரு பெண் நீதிபதிகள்** இருப்பது வரலாற்றில் இதுவே முதல்முறை மற்றும் இதற்குமுன் இவர் பெஷாவர் உயர் நீதிமன்றத்தின் (PHC) தலைமை நீதிபதியாகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**தான்சானியாவில் சுவாமி விவேகானந்தரின் மார்பளவு சிலையை மத்திய அமைச்சர் திறந்து வைத்துள்ளார்.**

- தான்சானியாவில் உள்ள **டார் எஸ் சலாம்** பகுதியில் அமைந்துள்ள இந்தியாவின் கலாச்சார மையத்தில் **இந்திய மறுமலர்ச்சியின் சிற்பியான சுவாமி விவேகானந்தரின்** மார்பளவு சிலையை மத்திய வெளியுறவு அமைச்சர் (EAM) டாக்டர் **எஸ் ஜெய்சங்கர்** ஜூலை 06 அன்று திறந்து வைத்துள்ளார்.
- இந்த சிலையானது நிச்சயமாக அவரது காலமற்ற போதனைகளுக்கு சாட்சியமாக இருக்க வேண்டும் மற்றும் இது உண்மையில் மனிதகுலத்தின் மீதான அவரது நம்பிக்கையின் எல்லைகளைத் தாண்டியது என்று மத்திய வெளியறவு துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது மங்கோலியாவில் "செயற்கைக்கோள் இணைய சேவையை" தொடங்க திட்டமிட்டுள்ளது.**

- குறைந்த சுற்றுப்பாதை அமைப்பிலான செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி இணைய சேவை வழங்குவதற்காக **எலான் மஸ்க்கின்** ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்துடன் மங்கோலியா அரசாங்கமானது சில நிபந்தனைகளுடன் இரண்டு **உரிமங்களை** வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இதன் மூலம் மங்கோலியாவில் உள்ள பல மில்லியன் கணக்கான **இணைய பயனாளர்கள்** ஸ்பேஸ்எக்ஸால் இயக்கப்படும் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு இணைய சேவையான "**ஸ்டார்லிங்க்**" வழியாக அதிவேக இணைப்பை பெற முடியும் என மங்கோலியா அரசாங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

Examsdaily

## மாநில செய்திகள்

**தெலுங்கானாவில் 6000 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.**

- ஜூலை 08 2023 அன்று காலை தெலுங்கானா மாநிலத்தின் **வாரங்கலில் 6000 கோடி** ரூபாய் மதிப்பிலான பல்வேறு உள்கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கிறார்.
- 500 கோடி ரூபாய் முதலீட்டில் **ரயில்வே தயாரிப்பு வசதி** மற்றும் 5,550 கோடி ரூபாய் மதிப்பிலான **176 கிமீ நீள தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள்** முதற்கொண்டு மேலும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உதவும் வகையில் தொடங்கி வைக்கிறார்.

**வாரணாசியில் 12,100 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு மேம்பாட்டு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ளார்.**

- பிரதமர் மோடி, 7 ஜூலை அன்று **உத்திர பிரதேச** மாநிலத்தின் **வாரணாசியில்** கிட்டத்தட்ட மொத்தம் 12,110 கோடி ரூபாய் மதிப்பிலான 29 வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்துள்ளார்.
- **மணிகர்னிகா மற்றும் ஹரிஷ்சந்திரா தாழ்வாரங்களை மறுவடிவமைப்பு செய்தல், 3 இருவழி ரயில் மேல் பாலம் (ROB), 15 PWD சாலைகள் கட்டுமானம் புதுப்பித்தல்** ஆகியவை இதில் அடங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் இந்த திட்டமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

**பிகானேரில் 24,300 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு மேம்பாட்டு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.**

- 24,300 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு மேம்பாட்டு வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் மோடி **ஜூலை 08** அன்று மாலை **ராஜஸ்தானில்** உள்ள **பிகானேரில்** அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்துள்ளார்.
- மேலும் இதில் 11,125 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள **அமிர்தசரஸ் - ஜாம்நகர்** பொருளாதார வழித்தடத்தின் ஆறு வழி பசுமையான விரைவுச் சாலை திட்டமானது முக்கியத்துவமாக பார்க்கப்படுகிறது ஏனெனில் இந்த சாலை செல்லும் பகுதிகளில் உள்ள கிராமங்கள் மற்றும் மக்களின் பொருளாதாரத்தை இது மேம்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மணிப்பூரில் மறுவாழ்வுத் திட்டமானது ஜூலை 07 அன்று தொடங்கப்பட்டுள்ளது.**

- மணிப்பூர் மாநிலத்தில் நிலவும் குளறுபடிகள் காரணமாக இடம்பெயரும் பாதிக்கப்பட்ட **இளங்கலை** மற்றும் மற்ற மாணவர்களுக்குத் தேவையான கல்வி மற்றும் சேவை வசதிகளை வழங்குவதற்காக "**முதல்வரின் கல்லூரி மாணவர்கள் மறுவாழ்வுத் திட்டம் 2023**" ஆனது ஜூலை 07 2023 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவர்கள் தங்கு தடையின்றி தங்கள் கல்வியை தொடர்வதற்கான ஒரு **அடித்தளமாக** இது அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை அம்மாநில கல்வி அமைச்சர் த.பசந்த குமார் மாநில தலைநகரமான **இம்பாலில்** தொடங்கி வைத்துள்ளார்.

**குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கும் திட்டம் செப்டம்பர் மாதத்திலிருந்து தொடங்கப்படுகிறது.**

- தமிழகத்தில் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு **மாதம் 1000 ரூபாயானது** உரிமைத் தொகையாக வழங்கும் திட்டமானது **செப்டம்பர்** மாதம் முதல் தொடங்கப்படும் என மாநில பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்திற்கு **"கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்"** என்று பெயரிடப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. அதன்படி "**செப்டம்பர் 15-ம் தேதி**" முதல் இந்த திட்டமானது தொடங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

**தமிழக அரசு மற்றும் புகழ்பெற்ற மென்பொருள் நிறுவனமான மைக்ரோசாப்ட் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமானது(MoU) மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- சிற்றூர் மற்றும் கிராமப்புற மாணவர்கள் சமீபத்திய **தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளைக் கற்கும் வாய்ப்பை வழங்குதல்**, **தொழில்நுட்பக் கல்வி மற்றும் கற்றல் ஆதரவு (TEALS) திட்டத்தை செயல்படுத்துதல்** ஆகியவற்றை நோக்கமாக கொண்டு தமிழக கல்வி துறை மற்றும் புகழ்பெற்ற மென்பொருள் நிறுவனமான மைக்ரோசாப்ட் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமானது(MoU) மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் **அன்பில் மகேஷ் பொய்யாமொழி** முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் இது அரசு பள்ளி மாணவர்களிடையே **STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) கல்வியை** மேம்படுத்துவதற்கான மாநில அரசின் முயற்சியின் முக்கியமான ஒரு பகுதியாக அமைந்துள்ளது என பள்ளி கல்வி துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Examsdaily

## நியமனங்கள்

**ரஷ்யாவின் புகழ்பெற்ற எண்ணெய் நிறுவனமான ரோஸ் நேப்ட் ஆனது தனது குழுவில் முதல் இந்தியரான "ஜிகே சதீஷை" நியமித்துள்ளது.**

- ரஷ்யாவின் புகழ்பெற்ற எண்ணெய் நிறுவனமான **ரோஸ் நேப்ட்** ஆனது ஜூலை 2023இல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் (IOC) முன்னாள் இயக்குநரான **கோவிந்த் கோட்டித் (GK) சதீஷை** அதன் **தலைமை நிபுணத்துவ குழுவில்** உறுப்பினராக இணைப்பதற்கான நியமன அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- இந்த நியமனத்தின் மூலம் **ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களின் தலைமை குழுவில் நியமிக்கப்பட்ட முதல் இந்தியர்** என்ற பெருமையை கோவிந்த் கோட்டித் பெற்றுள்ளார். இந்தியாவுடனான வர்த்தக தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நியமனமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

## தொல்லியல் ஆய்வுகள்

**கீழடியில் தங்க அணிகலன், கண் மை தீட்டும் குச்சி உள்பட 183 அரிய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.**

- **சிவகங்கை** மாவட்டத்தில் உள்ள கீழடியில் நடைபெற்று வரும் **9ஆம் கட்ட அகழாய்வில்**, தங்க ஆபரணம், கண் மை தீட்டும் செப்பு கம்பி , அழகு சாதன குச்சி உள்ளிட்டவை சமீபத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் துறை ஜூலை 08 அன்று தெரிவித்துள்ளது.
- மேலும் இதுவரை **183 பொருட்கள்** கண்டறியப்பட்டுள்ளதாக தொல்லியல் துறை பொறுப்பு ஆணையர் **சிவானந்தம் ஐயா** அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழடியில் இந்த 9ஆம் கட்ட அகழாய்வு பணிகளானது கடந்த **ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி** தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் ஆவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Examsdaily